பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 09 2024 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்காவின் பாஸ்டன் மற்றும் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரங்களில் இந்திய தூதரகம் புதிதாக அமைக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. செமி கண்டக்டர் உற்பத்தியை மேம்படுத்த இந்தியா – அமெரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை மிக முக்கியமானது என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற கூட்டமைப்பின் இந்திய மண்டல உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

4. இந்திய கடற்படையின் கடல்சார் கருத்தரங்கு இன்று கோவாவில் உள்ள கடற்படை பயிற்சி கல்லூரியில் தொடங்குகிறது.

5. பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற கூட்டமைப்பின் இந்திய மண்டல உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

மக்களவைத் தலைவரும், இந்திய மண்டலத்தின் தலைவருமான திரு ஓம். பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் 46 அவைத்தலைவர்கள், துணைத்தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவை தலைவர், துணைத்தலைவர்கள் மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் தலைவர்கள், யூனியன் பிரதேசங்களின் அவைத்தலைவர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.

அவைகளின் முதன்மைச்செயலர்கள் மற்றும் உயரதிகாரிகளும் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

உள்ளார்ந்த வளர்ச்சியில், நாடாளுமன்ற அவைகள் மற்றும் சட்டமன்றங்களின் பங்கு என்ற கருப்பொருளுடன் இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

<<<<>>>>

இந்திய கடற்படையின் சார்பில் ஐந்தாவது கோவா கடல்சார் கருத்தரங்கு இன்று கோவாவில் உள்ள கடற்படை பயிற்சி கல்லூரியில் தொடங்குகிறது.

இதுதொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய பெருங்கடல் மண்டல நாடுகளுக்கு இடையே கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் கோவா கடல்சார் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இந்திய பெருங்கடல் மண்டல நாடுகளில் பொதுவான பாதுகாப்பு பிரச்சினைகள், சவால்கள் குறித்தும், அதனை திறம்பட கையாள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

சட்ட விரோத கடல்சார் குற்றங்களை தடுப்பது மற்றும் மீன்பிடி எல்லைகளில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது உள்ளிட்டவை குறித்தும் இதில் விவாதிக்கப்பட உள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் கோவா கடல்சார் மாநாட்டில் பங்களாதேஷ், இந்தோனேஷியா, மடகாஸ்கர், மலேசியா, மாலத்தீவு, மொரிஷியஸ், மியான்மர், செஷல்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

கென்யா மற்றும் தான்சானியா நாடுகளிலிருந்து பார்வையாளர்கள் இந்த கடல்சார் கருத்தரங்கில் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

இலங்கையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் திரு. அநுர குமார திசநாயக புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் இந்த தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சஜித் பிரமதாசைவிட அதிக சதவீதத்தில் வாக்குகளைப் பெற்று அதிபராகியுள்ளார்.

இலங்கை அதிபர் தேர்தலில் எந்த வேட்பாளரும் 50 சதவீதத்திற்கும் மேல் வாக்குகளைப் பெறாத நிலையில், இரண்டாம் விருப்ப வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

அதில் திரு. அநுர குமார திசநாயகவிற்கு அதிக வாக்குகள் கிடைத்தது.

இதனையடுத்து அவர் இலங்கை தேர்தல் ஆணையத்தால் புதிய அதிபராக அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில் திரு. அநுர குமார திசநாயக இன்று பதவியேற்றுக்கொள்கிறார்.

இலங்கையின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. அநுர குமார திசநாயகவிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில், இந்தியாவின் அண்டைநாடான இலங்கை மிக முக்கியத்துவம் வாய்ந்த நாடு என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளின் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதத்திலும், மக்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் புதிய அதிபர் திரு. திசநாயகவுடன் இணைந்து செயல்பட தாம் விரும்புவதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவின் பாஸ்டன் மற்றும் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரங்களில் இந்திய தூதரகம் புதிதாக அமைக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள அவர், நேற்றிரவு நியூயார்க்கில் நடைபெற்ற இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் தமிழ் இருக்கை அமைக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இயற்கையின் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருப்பதுதான் இந்தியாவின் பாரம்பரிய அடையாளம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கரியமில வாயு வெளியீடு உலக நாடுகளை ஒப்பிடும்போது மிக மிக குறைவு என்று குறிப்பிட்டார்.

சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் ஆகியவற்றில் இந்தியா கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஐந்து-ஜி அலைக்கற்றை சேவையைவிட இந்தியாவில் ஐந்து-ஜி சேவை அதிக அளவில் உள்ளதாகவும், தற்போது ஆறு-ஜி அலைக்கற்றை வசதியைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக இந்திய கலாச்சாரத்தைப் பறைசாற்றும் விதத்திலான கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி ஐ.நா. சபையின் பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றுகிறார்.

சிறப்பான எதிர்காலத்திற்கான ஒன்றிணைந்த தீர்வு என்ற தலைப்பில் அவர் உரையாற்றுகிறார்.

முன்னதாக நேற்று அமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களின் முதன்மைச் செயல் அதிகாரிகளை சந்தித்து உரையாடினார்.

நியூயார்க்கில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அடோப் நிறுவனத்தின் தலைவர் சாந்தனு நாராயண், கூகுள் நிறுவன முதன்மைச் செயல் அதிகாரி திரு. சுந்தர்பிச்சை, ஐ.பி.எம். நிறுவனத்தின் திரு. அரவிந்த் கிருஷ்ணா, ஆக்சஞ்சர் நிறுவனத்தின் திருமதி ஜூலி ஸ்வீட் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டர், செமி கண்டக்டர் மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் விதத்தில் விவாதங்கள் நடைபெற்றன.

<<<<>>>>

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி குவைத் பட்டத்து இளவரசர் ஷேக் சபா அல் காலித் அல் சபாவை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து உரையாடினார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வரலாற்று ரீதியிலான உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

நேபாள் பிரதமர் திரு. கே.பி. ஷர்மா ஒலியையும் சந்தித்து அவர் உரையாடினார்.

இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் விதத்தில் பல்வேறு துறைகளில் இந்தியா – நேபாளம் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வழிமுறைகள் குறித்து விவாதித்தனர்.

<<<<>>>>

இந்திய சமூக நீதி இயக்கத்தின் தலைவரும், இ.சி.ஐ. பேராயருமான எஸ்ரா சற்குணம் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார். அவருக்கு வயது 86.

பேராயர் மறைவுக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் நலன் பாதுகாக்கப்படவும், அவர்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படவும் தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு வந்த பேராயர் எஸ்ரா சற்குணம் அவர்களின் மறைவு கிறித்துவ பெருமக்களுக்கு மட்டுமின்றி சமூகநீதியின் மீது அக்கறை கொண்ட அனைவருக்கும் நேர்ந்த பேரிழப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

அவரை இழந்து வாடும் இ.சி.ஐ. திருச்சபை நிர்வாகிகள், உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<>>>>

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரும் வெள்ளிக்கிழமை கான்பூரில் நடைபெறுகிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் பட்டியலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

கேப்டன் ரோஹித் சர்மா தலைமையிலான 11 பேர் கொண்ட குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

யஷஸ்வி ஜெய்ஸ்வால், சுப்மன்கில், விராட் கோலி, கே.எல். ராகுல், சர்ஃபராஸ் கான், ரிஷப் பந்த், துருவ் ஜுரேல், ரவிச்சந்திரன் அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், முகமது சிராஜ், ஆகாஷ்தீப், ஜஸ்ப்ரித் பும்ரா, யாஷ் தயால் ஆகியோர் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

-------------

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்ற 45வது ஃபிடே செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

சாதனை படைத்துள்ள ஆடவர் மற்றும் மகளிர் அணிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இந்தியாவின் விளையாட்டுத்துறைக்கு இது மிகப்பெரிய உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றி இளம் செஸ் விளையாட்டு வீரர்களுக்கு மேலும் ஊக்குவிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினும் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தங்களது எல்லைகளை தொடர்ந்து அகலப்படுத்தி இடைவிடா அர்ப்பணிப்புடன் நமது நாட்டுக்கு பெருமை தேடித் தந்துள்ளது நெஞ்சுக்கு இதமளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>